பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:53 | 18.01.2024 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054

# செங்கடலில் மோதல் கொழும்பு துறைமுகத்தில் நெரிசல்



செங்கடலில் கப்பல்கள் மீது ஹூவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்த ஆரம்பித்ததில் இருந்து கொழும்பு துறைமுகம் ஒரு போக்குவரத்து மையமாக பயன்படுத்தப்பட்டு வருவதாக இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

துறைமுகத்தின் மூன்று முனையங்களில் உள்ள கப்பல் கவுண்டர்களில் அதிக கப்பல் பாதைகளை கோரியுள்ளன, மேலும் இந்தியாவில் இருந்து வரும் கப்பல்களின் அளவும் அதிகரித்துள்ளது என்று துறைமுக அதிகாரசபை சுட்டிக்காட்டுகிறது.

கொழும்பு துறைமுகத்தின் மூலோபாய அமைவிடம் காரணமாக துறைமுகத்தைக் கடக்கும் கப்பல்கள் மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் கிழக்கு ஆசியாவை இலகுவாக அணுக முடியும் என இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா வழியாக செல்லும் கப்பல்களின் முதல் துறைமுகமாக கொழும்பு துறைமுகம் திகழ்வதால் போக்குவரத்து நெரிசல் அதிகரிக்கவும் காரணமாக உள்ளது.

சிங்கப்பூரின் அடுத்த துறைமுகம் வெகு தொலைவில் உள்ளதால் கப்பல்கள் விரைவாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைய முடியும் என்றும் துறைமுக அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

இஸ்ரேலிலிருந்து அரபு நாடுகளுக்கு செல்லும் கப்பல்கள் அந்த நாடுகளை ஏற்க மறுப்பதால், அந்தக் கப்பல்களும் கொழும்பு துறைமுகத்திற்கு வந்து மீண்டும் ஏற்றும் பணியை மேற்கொள்கின்றன.

ஹூவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களால், இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

செங்கடல் ஊடாக பயணிக்க முடியாத காரணத்தினால் வேறு வழித் தடங்களில் பயணிப்பதற்கு அறவிடப்படும் கப்பல் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணம் எனவும் துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## கொக்குவில் பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இன்று வியாழக்கிழமை (18) நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் நேரடி பங்கேற்புடன் குறித்த டெங்கு ஒழிப்பு வேலை திட்டமானது முன்னெடுக்கப்படுகிறது

கொக்குவில் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விஜயம் மேற்கொண்டதோடு வீடுகளில் டெங்கு நுளம்பு காணப்படும் இடங்கள் அகற்றப்பட்டதோடு பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக ஊழியர் சங்க கவனயீர்ப்பு போராட்டம்

பல்கலைக்கழக கல்வி சாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக தொழிற் சங்க சம்மேளனம், அறிவித்த நாடு முழுவதிலும் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்று (18.01. 2024) ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தமும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடைபெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தினை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டது.

# பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் மீது கண்ணீர்ப்புகை தாக்குதல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இன்று (18) பிற்பகல் இந்த ஆர்ப்பாட்ட பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், போராட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் சம்பள அதிகரிப்புடன் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு கோரி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துடன் இணைந்ததாக இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட நேரிடும் என பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# மாவீரர் துயிலும் இல்ல காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை தனிநபரிடமிருந்து இராணுவத்துக்கு சுபீகரிப்பதற்கான நில அளவீட்டுப் பணி இன்று இடம்பெறவிருந்த நிலையில் பொதுமக்களால் அளவீட்டுப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு நில அளவை திணைக்கள அதிகாரிகள் நில அளவீட்டுப் பணிக்காக துயிலும் இல்ல காணிக்குச் சென்றபோது அங்கு கூடிய மக்கள் இந்த இடத்தில் நாம் எமது உறவுகளை புதைத்துள்ளோம் இந்தக் காணியை அளவிட அனுமதிக்க மாட்டோம் என்றதன் அடிப்படையில் அளவீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் மக்களுடன் இணைந்து முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் அவர்களும் மக்களுடன் கலந்து கொண்டனர்.

# வைத்தியரை அச்சுறுத்திய சுகாதார ஊழியர்கள்

கராப்பிட்டிய வைத்தியசாலையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பில் விசேட வைத்தியர்கள் சங்கத்தின் கராப்பிட்டி கிளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் கிரிஷாந்த பெரேராவினால் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைக்கு அன்றைய தினம் சுகாதார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பினால் இடையூறு ஏற்பட்டிருந்ததாக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் வைத்திய நிபுணர் கிரிஷாந்த பெரேரா உரிய பிரிவுக்கு அறிவித்திருந்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக கடந்த 17 ஆம் திகதி சுகாதாரப்பணியாளர்கள் குழுவொன்று வைத்தியர் கிரிஷாந்த பெரேராவை அச்சுறுத்தியதுடன், அந்தக் குழுவினர் தொடர்ச்சியாக உயிரச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் விசேட வைத்தியர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# ரின்மீன் அரசியல்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை ரின்மீனை இறக்குமதி செய்வதை நகைச்சுவையாக சிரித்திரன் சஞ்சிகை சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் கண்டித்தது. ரின்மீன் இறக்குமதிக்கான முன் அனுமதியை வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்தவிடம் பணிப்புரை விடுத்தார்.

கடற்றொழில் அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கடற்றொழில் அமைச்சருக்கும் ரின்மீன் உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது, அவர்கள் எதிர்நோக்கும் பல விடயங்களை பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

கடந்த சில மாதங்களாக வெளிநாடுகளில் இருந்து பெருமளவிலான ரின்மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் விளைவாக உள்ளூர் ரின்மீன்களை விற்பனை செய்வதில் உள்ள சிரமம் அவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகும். 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் உள்ளூர் ரின்மீன்களுக்கு VAT வரி விதிக்கப்பட்டதன் விளைவாக ரின்மீனின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். இருப்பினும் தேவைக்கு ஏற்ப ரின்மீன்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும். உள்ளூர் சந்தையில், கடந்த சில மாதங்களில் அதிக அளவு ரின்மீன்களை இறக்குமதி செய்யும் போக்கை அவர்கள் அவதானித்துள்ளனர், மேலும் இந்த இறக்குமதியின் விளைவாக அவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின்மீன்களை விட இறக்குமதி செய்யப்படும் ரின்மீன்களின் விலை மலிவாக இருப்பதாக பிரதிநிதிகள் மேலும் சுட்டிக்காட்டினர். அதிகரித்த வட் மற்றும் செஸ் வரியின் விளைவாக அவர்கள் தங்கள் தயாரிப்புகளை அதே விலைக்கு விற்க முடியாது, மேலும் அவர்கள் தங்கள் தொழிற்சாலைகளை மூடவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ரின்மீன் இறக்குமதிக்கான முன் அனுமதியை வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்த அமைச்சர், ரின்மீன்களுக்கு மேலதிக வரியை அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

நாட்டில் மீன்களின் விலை அதிகரிக்கும் காலப்பகுதியில், ரின் மீன் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான மீன் பதனிடுதல்களை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்குமாறு கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சர் மேலும் பணிப்புரை விடுத்ததுடன், ரின்மீன் உற்பத்தியாளர்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் வழங்கினார்.

நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தடுக்கும் வகையில் மீன்களின் சந்தை விலையை அவதானித்து அடிக்கடி வழங்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். இலங்கையின் கடல் வளத்தை தமிழக மீனவர்கள் சூறையாடுகிறார்கள். சீன நிறுவனங்களுக்கு கடலட்டை அனுமதி வழங்கப்படுகிறது. வடமாகாண கடலில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி வாடி அமைத்து மீன் பிடிக்கிறார்கள். யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் பிடிக்கப்படும் மீன்கள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் அதிக விலை கொடுத்து மீன் வாங்க வேண்டிய நிலை உள்ளது. முறையாகத் திட்டமிட்டால் உள்நாட்டில் ரின்மீன் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்ய முயற்சி




வெகுஜன ஊடக அமைச்சுக்கு எழுதிய கடிதத்தில், இலங்கையின் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு (RTISL) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி குறித்து கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளது. (UNDP) தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டங்களை எளிமைப்படுத்துவதற்கான திட்டம்.

வெகுஜன ஊடக அமைச்சின் ஒன்று மற்றும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் இரண்டு கடிதங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, 'தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டங்களை எளிமைப்படுத்துதல்' என்ற இணைக்கப்பட்ட ஆவணத்துடன், RTI ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், DC திஸாநாயக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வெளிப்படுத்தினார். தற்போதுள்ள சட்டத்தில் திருத்தம் தேவையில்லை என்று கருத்து.

சர்வதேச அளவில் தகவல் அறியும் உரிமைச் சட்டங்களின் உலகளாவிய மதிப்பீட்டில் இலங்கையின் RTI ஆட்சி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது என்பதை திஸாநாயக்க எடுத்துரைத்தார். "இந்த மதிப்பீடு சட்ட கட்டமைப்பின் ஒட்டுமொத்த வலிமை மற்றும் சட்ட கட்டமைப்பின் பலம் மற்றும் பலவீனங்களை ஏழு வெவ்வேறு பிரிவுகளில் கணக்கில் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது, அதாவது: அணுகல் உரிமை, நோக்கம், கோரிக்கை நடைமுறைகள், விதிவிலக்குகள் மற்றும் மறுப்புகள், மேல்முறையீடுகள், தடைகள் மற்றும் பாதுகாப்புகள் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள்," என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டமானது சர்வதேச நாணய நிதியத்தால் (IMF) அதன் சமீபத்திய ஆளுகை கண்டறியும் அறிக்கையில் வெளிப்படைத் தன்மைக்கு ஒரு சிறந்த உதாரணமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும், எதிர்காலத்தில் சட்டத்தை அகற்றும் சட்டங்களை இயற்ற வேண்டாம் என்றும் இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. அதன் செயல்திறன்.

RTI ஆணைக்குழுவின் கடிதம் UNDP இன் வதிவிடப் பிரதிநிதியுடன் பகிர்ந்து கொண்டது, UNDP திட்டத்தின் ஒரு பகுதியாக தொழில்நுட்பக் குழுவினால் உருவாக்கப்பட்ட மற்றும் நீதி அமைச்சகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள RTI சட்டத்தின் சுருக்கம் அமைக்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியது. திருத்தங்கள் மற்றும் சட்டத்தின் தற்போதைய விதிகளை துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

திஸாநாயக்க, இந்தச் சட்டத்தின் முக்கியப் பிரிவுகளைத் தவிர்த்துவிட்டு, சட்டத்தின் முக்கியமான விதிகளைக் கலப்பதால், சுருக்கம் அடிப்படையில் பொருத்தமற்றது என்று RTI ஆணைக்குழு கண்டறிந்துள்ளது என்றார்.

அதன்படி, திட்டத்தின் ஒரு பகுதியாக பரப்பப்பட்டால், இலக்கு பார்வையாளர்களிடையே குழப்பத்தையும் தவறான புரிதலையும் ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தகவல் அறியும் உரிமை ஆணையத்தின் சுதந்திரத்தையும் திறனையும் மேம்படுத்துவதுடன், தற்போது உள்ள சட்டத்தின் கடமைகளை நிறைவேற்ற பொது அதிகாரிகளும் முயற்சி எடுக்க வேண்டும் என்றார் இயக்குநர் ஜெனரல். எனவே, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் உடனடியாகத் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று தகவல் அறியும் உரிமை ஆணையம் கருதுகிறது, என்று அவர் குறிப்பிட்டார்.

# அறநெறிப் பாடசாலை கலந்துரையாடல்

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் 20 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம், பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலையில் அறநெறிப் பாடசாலை சம்பந்தமான கலந்துரையாடல் மாலை 3 மணிக்கு அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார திணைக்கள உத்தியோகத்தர் கே.அஜித்தா, அப்பிரதேச கிராம சேவையாளர் சிவருபன், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான ந.பொன்ராசா, வி.உமாபதி, ச.ஜெயந்தன், பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய செயலாளர் இ.உமணசேனன், பொன்னாலை பிள்ளையார் கோயில் பிரதமகுரு, கண்ணன் மடாலய தலைவர் சிவராஜா, ரெமிங்ரன் கல்வி நிலைய முன்னாள் அதிபர் மனோகரன் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளனர்.

நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் பொதுச்செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி



காரைதீவு பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள, தெரிவு செய்யப்பட்ட 300 பயனாளி குடும்பங்களுக்கு புளொட் அமைப்பால் நிவாரணப் பொதிகள் நேற்று புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ப.ரவிச்சந்திரனின் (சங்கரி) தலைமையில் காரைதீவைச் சேர்ந்த புளொட் செயற்பாட்டாளர்கள் நிவாரண பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

அமைப்பின் ஜேர்மன் கிளையைச் சேர்ந்த தோழர்கள் இவ்வேலைத்திட்டத்துக்கான நிதி பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர். பயனாளிகள் தெரிவு நீதியும், நேர்மையுமான முறையில் இடம்பெற்று உள்ளது, எமது மக்களின் துன்பத்தில் பங்கெடுப்பவர்களாக நாம் எப்பொழுது உள்ளோம் என்று ஊடகங்களுக்கு ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

# 80,000 க்கும் அதிகமானவர்களின் நீர் விநியோகம் துண்டிப்பு

கடந்த வருடத்தில் 80,000க்கும் அதிகமான நீர் பாவனையாளர்களின் நீர் விநியோகம் கட்டணம் செலுத்தாமையால் துண்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

30 லட்சம் நீர் பாவனையாளர்களில் 80,970 பேருக்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக சபையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவர்களில் 63,150 வீட்டு நீர் பாவனையாளர்களும் மற்றும் 17,820 பிற நீர் பாவனையாளர்களும் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட நுகர்வோரிடமிருந்து 1,909 மில்லியன் ரூபா மீளப்பெற வேண்டியுள்ளதாக சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

# சிசிரிவி மூலம் போக்குவரத்து விதி மீறல்களுக்கு அபராதம்

கொழும்பில் உள்ள சிசிரிவி அமைப்பின் மூலம் போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடும் நபர்கள் அடையாளம் காணும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடும் நபர்கள் அடையாளம் காணப்பட்டு அபராத சீட்டு வாகன உரிமையாளருக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி முதல் இது நடைமுறைக்கு வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பட்டத்துடன் பல அடி உயரம் பறந்த இளைஞன்



தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் பட்டத்தின் கயிற்றில் ஏறி வானத்தை நோக்கி சென்ற காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவிற்காக தயாரிக்கப்பட்ட பெரிய பட்டத்தின் கயிற்றில் ஏறினார்.

பட்டத்தின் கயிற்றில் ஏறிய இளைஞன் மீண்டும் கீழே வரமுடியாமல் அசௌகரியத்தில் இருந்ததாகவும் பின்னர் கடின முயற்சியின் பின்னர் காப்பாற்றப்பட்டதாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன் 2021 ஆம் ஆண்டு, பெரிய பட்டத்தைப் பறக்கவிடச் சென்ற இளைஞன் ஒருவர் கயிற்றில் தொங்கி சுமார் 100 அடி உயரத்தில் பறந்தார்.

# நல்லூரில் பொலிஸார் விசேட பூஜை



நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் தடுப்பு விசேட செயற்றிட்டமான 'யுக்திய' நடவடிக்கைக்கு ஆசி வேண்டி யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் பொலிஸார் விசேட பூஜை வழிபாடு செய்தனர்.

யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட அத்தியட்சகர், யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கிணங்க, போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டமாகிய 'யுக்திய' வேலைத்திட்டம் பொலிஸாரால் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு போதைப் பொருள் வியாபாரிகள் மற்றும் போதைப்பொருள் கடத்துபவர்கள் என பலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

# ஸிம்பாப்வேயில் 160 க்கும் மேற்பட்ட யானைகள் மரணம்



ஸிம்பாப்வேயில் வறட்சி நிலவுவதால், குறைந்தது 160 யானைகள் இறந்துள்ளன. மேலும் வெப்பமான, வறண்ட வானிலை தொடரும் என்பதால், மேலும் இறப்புகள் அதிகரிக்கும் என்று பாதுகாவலர்கள் அஞ்சுகின்றனர்.

யானைகள், எருமைகள், சிங்கங்கள், சிறுத்தைகள், ஒட்டகச்சிவிங்கிகள் மற்றும் பிற உயிரினங்களின் இருப்பிடமான 14,651 சதுர கி.மீ ஹ்வாங்கே தேசிய பூங்காவில் கடந்த ஆண்டு ஆகஸ்ட், டிசம்பர் மாதங்களுக்கு இடையில் யானைகள் இறந்தன. வேட்டையாடப்பட்ட சம்பவங்களில் குறைந்தது ஆறு யானைகள் சமீபத்தில் பூங்காவிற்கு வெளியே இறந்து கிடந்தன.

ஸிம்பாப்வே பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு மேலாண்மை ஆணையம் (ஜிம்பார்க்ஸ்) பூங்காவில் யானைகள் இறந்ததை உறுதிப்படுத்தியது, மேலும் அவை வறட்சிக்கு காரணம் என்று கூறியது.

# திருடப்பட்ட கலைப்படைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன



மார்க் சாகல், பாப்லோ பிக்காசோ ஆகியோரின் இரண்டு ஓவியங்கள் இஸ்ரேலிலுள்ள கலை சேகரிப்பாளரிடமிருந்து திருடப்பட்ட 14 ஆண்டுகளுக்குப் பிறகு பெல்ஜியத்தின் ஆண்ட்வெர்ப் நகரிலுள்ள அடித்தளத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

பிக்காசோவின் க்யூபிஸ்ட் உருவப்படம், டெட், சாகலின் எல் ஹோம் என் பிரியர், ஒரு மனிதன் பிரார்த்தனை செய்வதைக் காட்டுகிறது, பெப்ரவரி 2010 இல் ஹெர்சிகோவிச் குடும்பத்திற்குச் சொந்தமான டெல் அவிவ் வில்லாவிலிருந்து திருடப்பட்டது.

இரண்டு ஓவியங்களின் மதிப்பு $900,000 (+710,000). அதே திருட்டில், $680,000 மதிப்புள்ள நகைகளை திருடர்கள் எடுத்துச் சென்றனர் அவை இதுவரை மீட்கப்படவில்லை.

# ஈரான் தூதரை வெளியேற்றியது பாகிஸ்தான்

பாகிஸ்தானிலுள்ள பலுசிஸ்தான் மாகாணத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதை அடுத்து, ஈரான் தூதரை பாகிஸ்தான் வெளியேற்றியதுடன், ஈரானில் உள்ள தனது நாட்டு தூதரையும் நாட்டுக்கு திரும்ப வருமாறு பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

ஈரான், பாகிஸ்தான் ஆகியவற்றுக்கிடையேயான திட்டமிடப்பட்ட அனைத்து உயர்மட்ட பயணங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து பேசிய பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளர், ஈரானில் இருந்து தனது தூதரை திரும்ப பெற பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது என்றும், ஆனால் ஈரானுக்கான பாகிஸ்தான் தூதர் தற்போது ஒரு முக்கிய பயணம் மேற்கொண்டுள்ளதால் அவர் தற்போதைக்கு நாடு திரும்ப மாட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள ஜெய்ஷ் உல்-அட்ல் பயங்கரவாதக் குழுவின் இரண்டு முக்கியமான தளங்களைத் தாக்கியதாக ஈரான் அறிவித்தது.

# சனத்தொகையை அதிகரிக்க சீனா முயற்சி

2023 ஆம் ஆண்டின் இறுதியில், தேசிய மக்கள் தொகை 1,409.67 மில்லியனாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்ததைவிட 2023 இல் மக்கள் தொகை 2.08 மில்லியன் குறைந்துள்ளது என்று சீனாவின் தேசிய புள்ளியியல் பணியகம் (NBS) புதன் கிழமை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் தொகை சரிவு 2022 இல் பதிவான வீழ்ச்சியைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது. 1960க்குப் பிறகு முதல் முறையாக சீனாவின் மக்கள் தொகை குறைந்ததால் சீனா 850,000 மக்களை இழந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், சீனாவில் பிறப்புகளின் எண்ணிக்கை 9.02 மில்லியனாக இருந்தது. ஒரு ஆயிரத்திற்கு 6.39 பிறப்பு விகிதம் என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில் சீனாவின் பிறப்பு எண்ணிக்கை 9.56 மில்லியனாக இருந்தது.

# சர்வதேச பயங்கரவாத குழு பட்டியலில் ஹூவுதி



செங்கடல் சர்வதேச வணிகப் பாதையில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு காரணமாக இருப்பதாக ஏமனின் ஹூவுதி படையை சர்வதேச பயங்கரவாத குழுவாக அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது. ஏமன் உள்நாட்டுப் போரில் அந்நாட்டின் பெரும் பகுதியை கைப்பற்றிய ஹூவுதிகள் ஹமாஸ்களுக்கு ஆதரவாக இஸ்ரேஸ் துறைமுகத்துக்கு செல்லும் அந்நாட்டுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி, செங்கடல் பாதையில் செல்லும் கப்பல்கள் மீது ஏவுகணை, ஆளில்லா விமானங்கள் கொண்டு தாக்குதல் நடத்தியது. இவ்வாறு தாக்குதலுக்குள்ளான கப்பல்களில் பெரும்பாலானவை இஸ்ரேலுடன் தொடர்பு இல்லாதவை. இதனால் செங்கடல் வணிகப் பாதையில் அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கா ஏமனின் ஹூவுதிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியது.

ஹூவுதிகளை தீவிரவாதிகள் பட்டியலில் இணைப்பதால் அவர்களின் நிதி மற்றும் ஆயுத வளங்களை மட்டுப்படுத்தும் என்பது அமெரிக்காவின் கணக்கு.

இதனை அமெரிக்காவின் அரசு செயலாளர் ஆண்டனி பிளிங்கன் அறிவித்துள்ளார். என்றாலும் இஸ்ரேலுக்குச் செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் தொடரும் என்றும், பயங்கரவாத குழு என்ற அறிவிப்பு தங்களின் நிலைப்பாட்டை மாற்றாது என்றும் ஹூவுதிகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த வாரத்தில், செங்கடல் பாதையில் செல்லும் சர்வதேச கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்தும் ஹூவுதிகள் அதற்கு செவி சாய்க்கவில்லை.

# புதிய கொரோனா வகையை உருவாக்கி வரும் சீனா



உயிரைக் கொல்லும் புதிய கொரோனா வகையை சீனா உருவாக்கி வருவதாக ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தால் (பி.எல்.ஏ) பயிற்சி பெற்ற மருத்துவர்கள், 100 சதவீதம் உயிரைக் கொல்லும் “பாங்கோலின் கொரோனா வைரஸை” உருவாக்கியுள்ளனர்.

BioRxiv இல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, SARS-CoV-2 வைரஸின் வகையான பாங்கோலின் கொரோனா வைரஸ் GX_P2V, எலிகளின் உயிரை எடுக்கிறதா என்பதை சீன மருத்துவர்கள் சோதித்துள்ளனர்.

அந்தச் சோதனையில், அதிர்ச்சிகரமான சில முடிவுகள் வெளியாகியுள்ளன.

அந்தச் சோதனையின்படி, GX_P2V பாதிக்கப்பட்ட அனைத்து எலிகளும் உயிரிழந்துவிட்டன. எனவே, இந்த வைரஸால் மனிதர்களுக்கு ஏற்படக்கூடும் பாதிப்புகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

GX_P2V எனப்படும் இப்பாங்கோலின் கொரோனா வைரஸ் சீனாவின் ஆய்வகங்களில் உருவாக்கப்பட்டதாகும். அந்த ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்ட பதிப்பு தான் எலிகள் மீது சோதிக்க பயன்படுத்தப்பட்டது

பாங்கோலின் என்பது ஒரு விலங்காகும். அந்த விலங்கில் காணப்படும் கொரோனா வைரஸை தான் சீன மருத்துவர்கள் ஆய்வகத்தில் உருவாக்கியுள்ளனர்.

# டபுள் சூப்பர் ஓவரில் வென்றது இந்தியா

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பெங்களூருவில் நடைபெற்ற பரபரப்பான 3 ஆவது ரி20 போட்டியில் இந்தியா டபுள் சூப்பர் ஓவரில் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. ஜெயிஸ்வாலை 4 ஓட்டங்களில் அவுட்டாக்கிய பரிட் அஹ்மத் அடுத்ததாக வந்த விராட் கோலியை கோல்டன் டக் அவுட்டாக்கினார். சிவம் துபே 1, சஞ்சு சாம்சன் 0 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 4 விக்கெட்களை இழந்து 22 ஓட்டங்கள் எடுத்து இந்தியா தடுமாறியது.

ரோஹித் சர்மா ரிங்கு சிங்குடன் ஜோடி சேர்ந்து நிதானமாக விளையாடினார். ஆரம்பத்தில் அழுத்தத்தை உடைப்பதற்காக மிகவும் மெதுவாக விளையாடிய இந்த ஜோடி 10 ஓவர்கள் கடந்த பின் கொஞ்சம் கொஞ்சமாக அதிரடியாக விளையாடத் துவங்கியது. கடந்த போட்டிகளில் தடுமாறிய ரோஹித் சர்மா சதம் அடித்தார். ரோஹித் சர்மா 11 பவுண்டரி 8 சிக்ஸருடன் 121* (69) ஓட்டங்கள் குவித்தார். அவருடன் 5 ஆவது விக்கெட்டுக்கு 190 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து சரிந்த இந்தியாவை தூக்கி நிறுத்திய ரிங்கு 2 பவுண்டரி 6 சிக்ஸருடன் 69* (39) ஓட்டங்கள் விளாசி சூப்பர் பினிஷிங் கொடுத்தார். அதனால் 20 ஓவரில் இந்தியா 212/4 ஓட்டங்கள் அடித்தது.

213 ஓட்டங்கள் என்ற இலக்கைத் துரத்திய ஆப்கானிஸ்தானுக்கு பவர் பிளே ஓவர்களை பயன்படுத்தி அதிரடியாக விளையாடி 93 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து சிறப்பான துவக்கம் கொடுத்த ஓபனிங் ஜோடியில் ரஹ்மனுல்லா குர்பாஸ் 50 (32) இப்ராஹிம் ஜாட்ரானை 50 ஓட்டங்கள் எடுத்தனர். முகமது நபி அதிரடியாக விளையாடி 34 (16) ஓட்டங்கள் எடுத்து அச்சுறுத்தினார். கரீம் ஜானத் 2, நஜிபுல்லா ஜாட்ரான் 5 ஓட்டங்களில் அவுட்டான போதிலும் எதிர்ப்புறம் குல்பதின் நைப் அதிரடியாக விளையாடியதால் வெற்றியை நெருங்கிய ஆப்கானிஸ்தானுக்கு கடைசி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அதில் முகேஷ் குமார் 2 ஒய்ட் போட்டு தடுமாற்றமாக வீசியதை பயன்படுத்திய குல்பதின் 4, 0, 2, 6, 2, 2 ஓட்டங்கள் எடுத்து மொத்தம் 55* (23) ஓட்டங்கள் எடுத்ததால் போட்டி சமனில் முடிந்தது

வெற்றியாளரை தீர்மானிக்க நடந்த சூப்பர் ஓவரில் முகேஷ் குமாரின் முதல் பந்தில் குல்பதினை ஒரு ஓட்டத்தில் விராட் கோலி ரன் அவுட்டாக்கினார். ஆனாலும் முகமது நபி - குர்பாஸ் ஆகியோர் சேர்ந்து 1, 4, 1, 6, 3 பைஸ் எடுத்ததால் ஆப்கானிஸ்தான் 16 ஓட்டங்கள் எடுத்தது.

17 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் இந்தியா களம் இறங்கியது அசமதுள்ளா வீசிய சூப்பர் ஓவரில் ரோஹித், ஜெயஸ்வால் தலா 1 சிங்கிள் எடுத்தனர். பின்னர் 3, 4 ஆவது பந்துகளில் அடுத்தடுத்த சிக்ஸர்கள் அடித்த ரோஹித் சர்மா 5 ஆவது பந்தில் சிங்கிள் எடுத்து ரிட்டையர்ட் அவுட்டாகி சென்றார். அப்போது கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது ஜெய்ஸ்வால் ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்ததால் மீண்டும் போட்டி சமனில் முடிந்தது.

மீண்டும் நடத்தப்பட்ட சூப்பர் ஓவரில் பரிட் அஹ்மதுக்கு எதிராக 6, 4 விளாசிய ரோஹித் 3 ஆவது பந்தில் சிங்கிள் எடுத்தார். இருப்பினும் 4 ஆவது பந்தில் ரிங்கு அவுட்டாக அடுத்த பந்தில் சஞ்சு சம்சானுடன் ஏற்பட்ட தவறான புரிதலால் ரோஹித் சர்மா ரன் அவுட்டானார்.

இரண்டு விக்கெட்டுகளை இழந்ததால் கடைசிப் பந்தை எதிர்கொள்ளும் வாய்ப்பை இழந்த இந்தியா 12 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்தது. ரவி பிஸ்னோய் முதல் பந்தில் முகமது நபியை அவுட்டாக்கினார். 2 ஆவது பந்தில் கரீம் ஜனத் 1 ஓட்டம் எடுத்த நிலையில் 3 ஆவது பந்தில் குர்பாஸை அவுட்டாக்கிய பிஸ்னோய் இந்தியாவைத்ரில் வெற்றி பெறவைத்தார். 3 - 0 என்ற கணக்கில் இத்தொடரில் கோப்பையை வென்ற இந்தியா ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ரி20 கிரிக்கெட்டில் தோற்றதில்லை என்ற பெரிய கௌரவத்தை தக்க வைத்துக் கொண்டது.




இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 18.01.2024 அன்று வெளியிடப்பட்டது.